07.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெப்பச் சலனம்: தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு

வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகத்தில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மே 4-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை கத்திரி வெயில் காலம் நிலவியது. இதனால் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

தற்போது கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழைக்கான காலநிலை உருவாக உள்ளதால், தமிழகத்தில் வெப்பம் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழை பதிவானது. அதிகபட்சமாக தஞ்சாவூரில் 80 மி.மீ. மழை பெய்துள்ளது. அடுத்தபடியாக, கும்பகோணத்தில் 50 மி.மீ., நாகப்பட்டினம் மாவட்டம் வேடசந்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் ஆகிய இடங்களில் 40 மீ.மீ. மழையும் பதிவானது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் பாலச்சந்திரன் கூறியது:

கேரள மாநிலத்தில் அடுத்த 48 மணி நேரத்துக்குள் தென்மேற்கு பருவமழைக்கான காலநிலை உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் காரணமாக தமிழகத்தில் வெப்பம் மேலும் குறையும்.

வெப்பச்சலனத்தின் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது என்றார்.

5 இடங்களில் சதம்: தமிழகத்தில் திங்கள்கிழமை மாலை நிலவரப்படி 5 இடங்களில் 100 டிகிரிக்கும் அதிகமாக வெப்பம் பதிவானது. அதிகபட்சமாக மதுரையில் 103 டிகிரி வெயில் பதிவானது.

**திங்கள்கிழமை பதிவான வெப்ப அளவு (ஃபாரன்ஹீட்டில்):**

மதுரை 103

புதுச்சேரி 101

கரூர் பரமத்திவேலூர்,

பாளையங்கோட்டை, தொண்டி 100

திருச்சி, வேலூர், கடலூர் 99

சென்னை 98

## விதை விற்பனை: விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை அழைப்பு

தென்மேற்கு பருவமழை துவங்க உள்ளதால் விவசாயிகள் விதையை வாங்கிச் சென்று பயன்பெறுமாறு பல்லடம் வேளாண்மை துறை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து பல்லடம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜன் கூறியதாவது:

தென்மேற்கு பருவ மழை துவங்க இருப்பதால் பல்லடம் வட்டாரத்தில் தற்போது விவசாய சாகுபடிக்கு உகந்த சூழல் காணப்படுகிறது. அதற்கான முன்னேற்பாடுகளில் வேளாண்மைத் துறையினர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். துவங்க உள்ள காரி பருவ சாகுபடிக்காக வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வளர்ச்சித் திட்டத்தில்

உளுந்து வி.பி.என். 4, பாசிப்பயிறு கோ.ஜி.ஜி. 912 மற்றும் கொண்டைக்கடலை ஜேக்கி 9218, ஜே.ஜி. 11, விதைகள் கிலோ ரூ. 25 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதற்கான விதைகள் போதிய அளவு இருப்பில் உள்ளன. மேலும், தென்னையைத் தாக்கும் கூண் வண்டை கட்டுப்படுத்த 50 சதவீத அரசு மானியத்துடன் இனக்கவர்ச்சி பொறி விலை ரூ. 1,250-க்கு வழங்கப்படுகிறது.

மேலும், விவரங்களுக்கு பல்லடம் வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை உயர்வு**

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

பரமத்தி வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள், சேலம், கோவை, ஈரோடு, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு தினமும் லாரிகள் மூலம் அனுப்பப்படுகிறது. மேலும், சிறு விவசாயிகள் முதல் விவசாயிகள் அனைவரும் பரமத்தி வேலூர் சந்தைக்கு நேரடியாக வாழைத்தார்களை கொண்டு வந்து விற்பனை செய்யலாம்.

கடந்த வாரங்களில் நடைபெற்ற ஏலத்தில் பூவன் ரூ.250, ரஸ்தாலி ரூ.250, பச்சைநாடன் ரூ.200, கற்பூரவள்ளி ரூ.200-க்கு ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.3-க்கு ஏலம் போனது.

திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன. இதில், பூவன் ரூ.350, ரஸ்தாலி ரூ.300, பச்சைநாடன்ரூ.300, கற்பூரவள்ளி ரூ.300-க்கு ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று

ரூ.5-க்கு ஏலம் போனது. இந்த வாரம் அதிகளவு திருமண முகூர்த்தங்கள், கோயில் விழாக்கள் அதிகமாக உள்ளதால் வாழைத்தார்களின் விலை உயர்ந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரியில் மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது.

தேன்கனிக்கோட்டையில் திங்கள்கிழமை காலை 8 மணி வரையில் 41. மி.மீ. மழை பெய்துள்ளது பதிவாகி உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டாலும், மாலை நேரத்தில் வெப்பம் தணிந்து காணப்படுகிறது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மழை பெய்தது. இதனால் இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி வரையில் பெய்த மழையின் அளவு (மி.மீட்டரில்): தேன்கனிக்கோட்டை - 41, பெணுகொண்டாபுரம் 35.2, தளி - 30, பாரூர் - 22.6 , நெடுங்கல் - 15.8, கிருஷ்ணகிரி - 2, போச்சம்பள்ளி - 1.

## ஒசூரில் வேளாண்மைத் துறை பணிகள்: அரசு செயலர் ஆய்வு

கி00ருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் வேளாண்மைத் துறைப் பணிகளை வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் ஆ.விஜயகுமார் திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 12,000 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் ஒசூர் வட்டாரத்தில் மட்டும் 1,800 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. நடவு துவரையை பொருத்தவரையில் இம்மாவட்டம் முன்னோடி மாவட்டமாக உள்ளது.

ஒசூர் வட்டாரம், பேரகப்பள்ளி கிராமத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் ஆ.விஜயகுமார், சொட்டு நீர்ப் பாசன முறையில் நடவு துவரை வயல்கள், மானாவாரியில் நடவு துவரைப் பணிகளையும் பார்வையிட்டு விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது, மழைநீரை பயிர்களுக்கு செவ்வனே

பயன்படுத்தவும், சொட்டு நீர்ப் பாசனத்தை நிரந்தரமாக பயன்படுத்தவும் அறிவுரை வழங்கினார்.

மேலும், பஞ்சாட்சிபுரம் கிராமத்தில் நிழல்வளை துவரை சமுதாய நாற்றங்காலைப் பார்வையிட்டார். விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப உரிய கால இடைவெளில் விதைப்புப் பணி மேற்கொண்டு அதிக அளவில் இத்தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கினார். விவசாயிகள் ஆர்வலர் குழு அமைத்து துவரை பருப்பு உடைக்கும் இயந்திரம் மூலம் துவரம் பருப்பை உற்பத்தி செய்து விவசாயிகளே விற்பனை செய்யும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார். மத்திய, மாநில அரசுகள் மூலம் செயல்படுத்தப்படும் மான்யத் திட்டங்கள் விவசாயிகள் முழுமையாக பய பெறுவதை உறுதி செய்திடவும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.சபாநடேசன், வேளாண்மை துணை இயக்குநர்கள் திருமுருகு, ரவீந்தர், வேளாண்மை உதவி இயக்குநர்கள் ஆ.ராமலிங்கம், ராஜேந்திரன், வேளாண்மை அலுவலர்கள் என்.கணேஷ்குமார், சீனிவாசன், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேதாரண்யத்தில் 43.8 மி.மீ மழை

நாகை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக வேதாரண்யத்தில் 43.8 மி.மீ மழைப் பதிவானது.

தென்மேற்கு பருவ மழை விரைவில் தொடங்கவுள்ள நிலையில், வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அண்மையில் அறிவித்திருந்தது. இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை முதல் நாகை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் லேசான மற்றும் மிதமான மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் வெயில் இருந்தாலும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல், இரவு நேரங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது.

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக வேதாரண்யத்தில் 43.8 மழைப் பதிவானது. மற்ற பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்) :

தலைஞாயிறு - 36.8, திருப்பூண்டி- 23.4, கொள்ளிடம் (ஆணைக்காரன்சத்திரம்) - 23, மயிலாடுதுறை - 21.4, தரங்கம்பாடி, சீர்காழி - 8, நாகப்பட்டினம்- 6.3.

திங்கள்கிழமை பகல் நேரத்தில் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெயில் நீடித்தது. பிற்பகல் நேரத்தில் சில பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும் குறிப்பிடத்தக்க மழையில்லை.

**வரத்து குறைந்ததால் ஏறுமுகத்தில் கருப்புக்கட்டி விலை**

உடன்குடி, வேம்பார் கருப்புக்கட்டி ரகங்கள் மழையால் வரத்து குறைந்ததையடுத்து, அவற்றின் விலை உயர்ந்து வருகிறது. 10 கிலோ உடன்குடி கருப்புக்கட்டி ரூ.250 அதிகரித்து ரூ.1350- க்கு விற்கப்படுகிறது.

தமிழகத்தில் பல்வேறு பகுதியில் கருப்புக்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. எனினும், உடன்குடி கருப்புக்கட்டிக்கு தனி மவுசு உண்டு. தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி மற்றும் சுற்றுவட்டாரத்தில் உற்பத்தி செய்யப்படும் உடன்குடி கருப்புக்கட்டி ரகம் தமிழகம் மட்டுமன்றி பிற மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

மழைக் காலங்களில் கருப்புக்கட்டி உற்பத்தி பாதிக்கப்படுவதுண்டு. ஆகவே, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பெருமளவில் கருப்புக்கட்டி ரகங்கள் உற்பத்தி செய்து இருப்பில் வைத்து விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும். இதன் காரணமாக மழைக் காலங்களில் விலை அதிகரிப்பதும், உற்பத்தி அதிகரித்து வரத்து தொடங்கியதும் விலை குறைவதும் வழக்கம். வரத்து குறையும்போது, 10 கிலோ உடன்குடி கருப்புக்கட்டி ரூ. 2000 வரை விற்கப்படும்.

அவ்வாறு ரூ.2000-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த உடன்குடி கருப்புக்கட்டி, வரத்து அதிகரித்ததை அடுத்து கடந்த ஏப்ரல் மாதத்தில்

விலை குறைந்து 10 கிலோ ரூ.1100-க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து இதேநிலையில் விற்பனை ஆனது.

அண்மையில் திடீரென பெய்த மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டதால், கருப்புக்கட்டி ரகங்கள் வரத்து குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதன்காரணமாக உடன்குடி கருப்புக்கட்டி 10 கிலோவுக்கு ரூ.250 அதிகரித்து ரூ.1350-க்கும், வேம்பார் கருப்புக்கட்டி ரகம் 10 கிலோவுக்கு ரூ.200 அதிகரித்து ரூ.1200-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல், ஆலந்தூர் கருப்புக்கட்டி, அச்சுவெல்லம், மண்டவெல்லம் விலையும் சற்று உயர்ந்துள்ளது.

**விவசாயிகளுக்கும் அரசுத்துறைகளுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்க வேண்டும்: சித்தராமையா**

விவசாயிகளுக்கும் அரசுத்துறைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்று முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரு, விதானசௌதா முன்பகுதியில் திங்கள்கிழமை நடந்த நிகழ்ச்சியில் விவசாய திட்டங்களின் பிரசார வாகனத்தைத் தொடக்கிவைத்து அவர் பேசியது: நமது மாநிலத்திலும் நாட்டிலும் மக்கள் தொகை பெருகிக்கொண்டே உள்ளது. மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி ஆக வேண்டும். அப்போதுதான் உணவுப்பொருள் உற்பத்தியில் நாம் தன்னிறைவை அடையமுடியும்.

அதை சாத்தியமாக்குவதற்கு விவசாய வளர்ச்சிக்காக வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம், பட்டு, கூட்டுறவுத்துறைகள் மூலம் அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள், விவசாயம் மற்றும் கால்நடைபராமரிப்பு பல்கலைக்கழகங்கள் வெளியிடும் புதிய கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் விவசாயிகளிடம் சென்றடைய வேண்டும். அதாவது விவசாயிகளுக்கும் அரசுத்துறைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க வேண்டும்.

இந்த நோக்கத்திற்காகவே தென்மேற்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மாநிலத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் விவசாயத்

திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பிரசார வாகனங்களை அனுப்பும் திட்டத்தை தொடங்கியுள்ளோம். இந்தத் திட்டத்தின்மூலம் விவசாயிகளின் வீட்டு வாசலுக்கே திட்டங்கள் குறித்த தகவலை கொண்டுசெல்லத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த பிரசார வாகனத்தில் விவசாய அதிகாரிகள்,விஞ்ஞானிகள் செல்லவிருக்கிறார்கள். கிராமம் கிராமமாக சென்று அங்குள்ள நிலத்தின் மண்ணை சோதித்து, அதன் தன்மையை அறிந்துகொண்டு அதற்கேற்ப பயிர்களை பரிந்துரைக்கவிருக்கிறார்கள்.

மண்வளத்தை பெருக்கவும் பயிர்வளத்தை மேம்படுத்தவும் உரம் குறித்த தகவல்களை அளிக்கவிருக்கிறார்கள். மண்ணுக்கேற்ப விளைவிக்கக்கூடிய பயிர்கள் குறித்த தகவல்களையும் தரவிருக்கிறார்கள். வானம்பார்த்தநிலம், பாசனநிலம் குறித்தும் விவசாயிகளுக்கு விவரிக்கவிருக்கிறார்கள். பயிர்களை தாக்கும் நோய்கள், அதற்குண்டான கொல்லிகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தகவல் தருவார்கள். புதிய விதை, புதியதொழில்நுட்பம், புதிய செயல்முறைகள் குறித்தும்விவசாயிகளுக்கு விளக்கப்படவிருக்கிறது. பயிர் காப்பீடு உள்ளிட்ட அனைத்து தகவல்களும் அளிக்கப்படும். இந்தவாய்ப்பை விவசாயிகள்பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

விழாவில் வேளாண்துறை அமைச்சர் கிருஷ்ணபைரேகௌடா, செய்திமற்றும் மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் ரோஷன்பெய்க், சமூகநலத்துறைஅமைச்சர் எச்.ஆஞ்சநேயா, மின் துறை அமைச்சர் டி.கே.சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருத்தியை விரும்பும் இந்தியர்கள்

வெயிலுக்கு காட்டன் சட்டைகள், புடவைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. உலகளவில் ஆடை வர்த்தகத்தில் 67 சதவீதம் செயற்கை இழைகள் பயன்படுகின்றன.

ஆனால் இந்தியாவில் ஆடை வர்த்தகத்தில் அதிக அளவில், அதாவது 65 சதவீதம் செயற்கை இழைகளும் மீதி 35 சதவீதம் மட்டும் பருத்தி இழைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

உலகில் தனிநபர் செயற்கை இழைப்பயன்பாடு ஆண்டுக்கு 10 கிலோ. ஆனால் இந்தியாவில் இது வெறும் 1 கிலோ 700 கிராம் மட்டுமே. பருத்திக்கு அதிக முக்கியத்துவம் தந்து இந்தியா இன்று வரை அதன் பாரம்பரியத்தை காக்கிறது. கிழக்கிந்தியக் கம்பெனியின் வருகைக்கு முன் ஒவ்வொரு வீட்டிலும் ஆடைக்காக நுாற்றல் நடந்தது.

### நிலத்தடி நீர் ஆதாரத்தை நம்பி குறுவை சாகுபடி துவக்கம்

தஞ்சாவூர்: மேட்டூரில், இந்தாண்டு தண்ணீர் இல்லாததால், டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரத்தை நம்பி குறுவை பருவ நெல் சாகுபடி பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

மேட்டூர் அணையில், குறுவை பருவத்தில் தொடர்ந்து ஐந்தாம் ஆண்டாக போதுமான அளவுக்கு தண்ணீர் இல்லை. தென் மேற்கு பருவ மழையும், ஜூன் 2வது வாரத்தில் தான் துவங்கும் எனக் கூறப்படுவதால், மேட்டூர் அணை ஜூன், 12ம் தேதி திறப்பதற்கான வாய்ப்பில்லை. இதற்காக, தமிழக அரசும் தொகுப்பு திட்டத்தை அறிவித்துள்ளன. எனவே, டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரத்துக்கு வாய்ப்புள்ள பகுதிகளில் மட்டுமே குறுவை பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளக்கூடிய நிலை உள்ளது.இந்தாண்டு, குறுவை சாகுபடி இயல்பான அளவை எட்ட

வாய்ப்பில்லை என வேளாண் வல்லுனர்கள் தெரிவித்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில், 30 ஆயிரம் எக்டேரிலும், திருவாரூர் மாவட்டத்தில், 28 ஆயிரம் எக்டேரிலும், நாகை மாவட்டத்தில், 20 ஆயிரம் முதல், 25 ஆயிரம் எக்டேரிலும் என மொத்தம் ஏறத்தாழ, 80 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி எதிர்பார்க்கப்படுவதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், அண்மையில் பெய்த தொடர் மழையால் வயல்களில் தேங்கியுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்து வருகின்றனர். மேலும், நிலத்தடி நீர் ஆதாரமும், ஆழ்குழாய் மோட்டார் வசதியும் உடைய விவசாயிகள், குறுவை நெல் சாகுபடிக்கான நாற்றங்கால் நடுதலையும், நாற்று நடும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறத்தாழ, 7,500 எக்டேரிலும், நாகை மாவட்டத்தில், 4,000 எக்டேரிலும் நடவு செய்யப்பட்டுள்ளது.திருவாரூர் மாவட்டத்தில், தற்போது தான் குறுவை சாகுபடி பணிகள் துவங்கப்பட்டுள்ளன. டெல்டா மாவட்டங்களில், குறுவை சாகுபடிப் பரப்பளவு குறைந்து வரும் நிலையில், நிகழாண்டும் இயல்பான அளவை மட்டுமல்லாமல், கடந்த ஆண்டு அளவையும் எட்டுமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

**வைகாசியில் பொழிந்த மும்மாரி விவசாய பணிகள் தீவிரம்**

ஆர்.கே.பேட்டை: வைகாசி மாதம், மும்மாரி பொழிந்ததில், விவசாயிகள் உற்சாகமாக விவசாய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மீண்டும் ஒரு அறுவடையை வெற்றிகரமாக செய்யலாம் என, நம்பிக்கையுடன் உள்ளனர்.

வரலாறு காணாத அளவிற்கு, பருவமழை பெய்ததை தொடர்ந்து, கடந்த தை மாதம் நடவு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. நெல் அதிகளவில் விளைச்சல் கண்டது. இதனால், விலையும் குறைந்தது. அதை தொடர்ந்து, வைகாசி மாதத்தில், கடந்த 16ம் தேதி முதல், 18ம் தேதி வரை தொடர் மழையும், கடந்த செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில்

பெய்த பலத்த மழையால், ஆர்.கே.பேட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோடை அறுவடைக்கு பின், மீண்டும் ஒரு அறுவடையை வெற்றிகரமாக முடிக்க முடியும் என்ற நம்பிக்கையை வைகாசியில் பெய்த மழை ஏற்படுத்தியுள்ளது. பல ஆண்டுகளுக்கு பின், தொடர்ச்சியாக விவசாய பணிகளில் ஈடுபடுவது மனதிற்கு உற்சாகத்தை தருகிறது என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## பாசிப்பருப்பு கிலோ ரூ.80க்கு குறைந்தது

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து அதிகரிப்பால் பாசிப்பருப்பு விலை குறைந்துள்ளது.

திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு உள்ளூர் மற்றும் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து பாசிப்பருப்பு விற்பனைக்கு வருகிறது. தினமும் 2 டன் வரை விற்பனைக்கு வரும். கடந்த சில மாதங்களாகவே பருப்புகளின் விலை ஏறி இருந்தது. வரத்து அதிகரிப்பால் ஓரளவுக்கு பருப்புகளின் விலை குறைந்துள்ளது. இதில் பாசிப்பருப்பு விலை மேலும் குறைந்துள்ளது.

சென்ற வாரம் ஒரு கிலோ பாசிப்பருப்பு ரூ.130 முதல் ரூ.150 க்கும் விற்பனையானது. தற்போது சாகுபடி அதிகரிப்பு, உள்ளூர் மற்றும் வெளியூர் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. நேற்று முன்தினம் ஒரு கிலோ பாசிப்பருப்பு ரூ.110 க்கு விற்றது. நேற்று கிலோ ரூ.80 க்கு விற்பனையானது. இதே போல் ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.120, கடலைப்பருப்பு ரூ.85, உருட்டுப்பருப்பு ரூ.170 க்கும் விற்றது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,'மற்ற பருப்புகளை விட பாசிப்பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை குறைந்துள்ளது. மேலு<ம் விலை குறைய வாய்ப்புள்ளது',என்றார்.

**களையிழந்த ஒட்டன்சத்திரம் மார்க்கெட்: காய்கறி விலை உயர்வு**

ஒட்டன்சத்திரம்: வரத்து குறைவால் சுறுசுறுப்புடன் காணப்பட்ட ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட் களையிழந்துள்ளது. காய்கறி விலையும் உயர்ந்துள்ளது.

இந்தாண்டு வெயில் அதிகமாக இருந்ததால் ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் காய்கறி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. தினமும் குறைந்த அளவிலான காய்களே மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. காலை முதல் நள்ளிரவு வரை சுறுசுறுப்புடன் இயங்கும், மார்க்கெட் பொலிவின்றி காணப்படுகிறது. அடுத்தடுத்து முகூர்த்த நாட்கள் வருவதாலும், கோடை விடுமுறைக்க பின்பு பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டு விடுதிகளுக்கு காய்கறிகள் அதிகமாக வாங்கப்படுவதாலும் காய்கறி தேவை பல மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் வரத்து குறைவாக உள்ளது.

இதனால் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு காய்களை வாங்குகின்றனர். தக்காளி, வெங்காயம், முருங்கை ஆகியவற்றின் விலை ஏறுமுகமாக உள்ளது. 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ஒன்று ரூ.550 க்கு விற்றது. சில்லறை விற்பனையில் ரூ.650க்கு விற்றது. தற்போது மார்க்கெட்டில் புதுவெங்காயம் வரத்து உள்ளது. புது வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.42க்கும், பழைய வெங்காயம் ரூ.37க்கும் விற்றது. செடி முருங்கைக்காய் கிலோ ரூ.30க்கும், கரும்பு முருங்கை ரூ.25க்கும், மரம் முருங்கை ரூ.20க்கும் விற்றது.

**மரக்கன்றுகள் வழங்கல்**

செஞ்சி: உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு முட்டத்துார் கிரின் வேல்ட் டிரஸ்ட் சார்பில் மரக்கன்றுகளை வழங்கினர்.

விக்கிரவாண்டி தாலுகா முட்டத்துார் ஜோதி நிலையம் சி.எஸ்.ஐ., தேவாலயத்தில் கிரின் வேல்ட் டிரஸ்ட் சார்பில் உலக சுற்று சூழல் தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது.

ஸ்தல போதகர் புஷ்பநாதன் தலைமை தாங்கினார். டிரஸ்ட் நிறுவனர் அர்ச்சுனன் வரவேற்றார். பொருளாளர் இரகோத் முன்னிலை வகித்தார். சபை ஊழியர் ஹர்பர்ட் ரவிக்குமார், சீட்ஸ் தொண்டு நிறுவனம் ஞானமணி, தெய்வீக மக்கள் இயக்க நிறுவனர் ராஜாதேசிங்கம், மண்டகப்பட்டு ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஜெகநாதன் வாழ்த்துரை வழங்கினர்.

## விதைகள் இருப்பு

சங்கராபுரம்: சங்கராபுரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு தேவையான நெல் விதைகள், மணிலா, உளுந்து விதைகள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளபடுகின்றனர். இத்தகவலை சங்கராபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் கருணாநிதி தெரிவித்தார்.

## சேலம் மண்டல வனப்பகுதியில் ஒரு லட்சம் சந்தன மரக்கன்றுகள்

சேலம்: தென்மேற்கு பருவ மழை துவங்கவுள்ளதையொட்டி, சேலம் மண்டல வனப்பகுதியில், ஒரு லட்சம் சந்தன மரக்கன்றுகளை நட, வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

சேலம் மண்டலத்தின் சேலம் தெற்கு, சேலம் வடக்கு, ஏற்காடு, டேனிஷ்பேட்டை, மேட்டூர், நாமக்கல், கொல்லிமலை, ராசிபுரம் உள்ளிட்ட பகுதிகளில், சந்தன மரங்கள் அதிகமாக உள்ளன. அங்குள்ள மரங்களை, வனத்துறை அதிகாரிகள் பாதுகாக்கின்றனர். தற்போது தென்மேற்கு பருவ மழை துவங்க உள்ளதால், அந்த பகுதிகளில், சந்தன மர கன்றுகளை விதைப்பதன் மூலம், அந்த மரங்களின் எண்ணிக்கையை உயர்த்தலாம் என, வனத்துறையினர் திட்டமிட்டுள்ளனர். அதற்காக, மண்டலத்தில் உள்ள மலைப்பகுதிகளில், பல நாட்களாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது, மலைப்பகுதியில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கான, இடம் கண்டறியப்பட்டது. அதை தொடர்ந்து, ஒரு லட்சம் மரக்கன்றுகளை தயார்படுத்தும் பணியில்

வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். விரைவில், கன்றுகள் விதைக்கும் பணி துவங்கும்.

## 70 வகையான பேரீச்சை பழ கண்காட்சி

ஆத்தூர்: நரசிங்கபுரத்தில், அரபு நாடுகளில் விளைந்த, 70 வகையான பேரீச்சை பழம், பேரீச்சை பழத்தில் தயாரான உணவுகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

ஆத்தூர் அருகே, நரசிங்கபுரத்தை சேர்ந்த, ரவிசங்கர் என்பவர், 22 ஆண்டுகளாக, பேரீச்சை பழ, மொத்த விற்பனை தொழில் செய்து வருகிறார். அவர், அரபு நாடுகளில் விளைந்த, பேரீச்சை பழம், அதன் மூலம் தயாரான பேரீச்சை லட்டு, பேரீச்சை அல்வா, பேரீச்சை பருப்பி என, பல ரகங்களை கொண்டு, கண்காட்சி அமைத்துள்ளார். அதில், 70 வகையான பேரீச்சை பழம் இடம்பெற்றுள்ளதால், ஆத்தூர் சுற்றுவட்டார பகுதி மக்கள், அதிக அளவில் பழங்களை வாங்கிச்செல்கின்றனர்.

பேரீச்சை பழ விற்பனையாளர் ரவிசங்கர் கூறியதாவது: அரபு நாடுகளில் விளைந்த பேரீச்சை பழம் பதப்படுத்தப்பட்டு, விற்பனைக்கு வருகிறது. அந்த பழத்தின் அரசனாக, 'சுக்ரி' பேரீச்சை உள்ளது. இஸ்லாமிய மரம் எனும் அஜ்வா, அம்பர் பழங்கள், அதிக அளவில் சத்துகள் கொண்டது. எளிதில் செரிமானம் ஆகக்கூடிய நார்சத்து மற்றும் கார்போ ஹைட்ரேட் இயற்கையாகவே அதிகமாக உள்ளது. ஆழ்ந்த உறக்கத்திற்கு துணை புரிவதுடன், சோர்வை களைகிறது. ஒரு வேளைக்கு, இரு பழங்கள் வீதம், 30 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால், மாதவிடாய் குறைபாடு நீங்கும். நல்ல கண்பார்வை, உடல் வலுவடையும். வரும், 12ம் தேதி வரை, கண்காட்சி நடக்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

**பாலமலையில் தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி அதிகரிப்பு**

கொளத்தூர்: பாலமலையில், தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதில், வாழை உற்பத்தியை பெருக்க, தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது.

பாலமலையில், 33 குக்கிராமங்கள் உள்ளன. அங்கு வசிக்கும் மக்கள் விவசாயத்தை நம்பியுள்ளனர். 4 ஆண்டுகளுக்கு முன், பாலமலைக்கு மண்சாலை அமைக்கப்பட்டது. சாலை அமைப்பதற்கு முன், விவசாயிகள் நெல், தினை, சாமை உள்ளிட்ட பயிர்களையே அதிகம் சாகுபடி செய்தனர். சாலை அமைத்த பின், உற்பத்தி பொருட்களை வாகனத்தில் அடிவாரத்துக்கு எடுத்து செல்ல முடிந்தது. இதனால், பாலமலையில் மூன்று ஆண்டுகளாக வாழை, மரவள்ளி, தக்காளி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு, 300 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயிகள், மரவள்ளி மற்றும் வாழை சாகுபடி செய்தனர். நடப்பாண்டு பாலமலையில், 250 ஏக்கருக்கு மேல் வாழை சாகுபடியை விரிவாக்கம் செய்ய, கொளத்தூர் தோட்டக்கலை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

**சோளம் விளைச்சல், விலை அதிகரிப்பு மகிழ்ச்சியில் விவசாயிகள்**

போடி: மாவட்டத்தில் கடந்த ஆண்டை காட்டிலும் சோளம் விளைச்சல் மட்டுமின்றி விலையும் அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் போடி, மீனாட்சிபுரம், பி.அம்மாபட்டி, பத்திரகாளிபுரம், மேலச்சொக்கநாதபுரம், விசுவாசபுரம், பெருமாள் கவுண்டன்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சோளம் பயிரிடப்பட்டுள்ளனர்.

சோளத்தை பொறுத்தவரை ஏப்ரல்,மே, ஜூன் சீசன் மாதமாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு குவிண்டால்(100 கிலோ) சோளம் ரூ. 900 முதல் 1,000 வரை விலை இருந்தது. கடந்தாண்டு சோளம் விளைச்சல் அதிகரித்து, ஒரு குவிண்டால் ரூ.1,200 முதல் 1,300 வரை விற்றது. அதைவிட இந்த ஆண்டு சோளம் விளைச்சல் மட்டுமின்றி விலையும்

அதிகரித்துள்ளது. தற்போது சோளம் குவிண்டால் ரூ. 1, 400 முதல் 1, 450 வரை விலை போகிறது. குவிண்டாலுக்கு ரூ. 100 முதல் ரூ. 150 வரை விலை உயர்ந்துள்ளது.

விவசாயிகள் கூறுகையில்: மக்காச்சோளம் பயிரிட்டு வரும் விவசாயிகள் இடைக்காலமாக சோளம் பயிரிடுவது வழக்கம். கடந்த ஆண்டைவிட சோளம் விளைச்சல் மட்டுமின்றி விலையும் அதிகரித்துள்ளது. இதே விலை தொடர்ந்து இருந்தால் விவசாயிகளுக்கு நன்மை பயக்கும், என்றனர்.

## நோய் தாக்காத நெல் ரகத்துக்கு விவசாயிகள் மாறுங்க... கலப்பு விதையால் முளைப்பு திறன் குறையும்

காரைக்குடி: பி.பி.டி., எனப்படும் டீலக்ஸ் ரகத்தையே விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக பயிரிடுவதால், 20 முதல் 30 சதவீத இழப்பை சந்திக்கின்றனர். இதனால், இந்த ஆண்டு மாற்று ரகத்துக்கு மாறுங்க... என விவசாயிகளை வேளாண்துறை வேண்டி வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் 90 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் மானாவாரியாக நெல் பயிரிடப்படுகிறது. இவற்றில் அதிக பட்சமாக பி.பி.டி., எனப்படும் சன்ன ரகமான டீலக்சையே பயிரிடுகின்றனர். இந்த ரகம் 1985-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. விதையின் முளைப்பு தரம் குறைந்து விட்டதால், கடந்த மூன்று ஆண்டுக்கு முன்பே இதற்கான மானியம் வழங்குவதை வேளாண்துறை நிறுத்தி விட்டது.

ஆனால், அரிசி ஆலைகள் இந்த ரகத்தையே விரும்புவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் உள்ள விதைகளையே மறுபடியும், மறுபடியும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், குலைநோய், இலை கருகல் நோய் தாக்குதலுக்கு நெற் பயிர்கள் உள்ளாகி, 20 முதல் 30 சதவீதம் வரை ஒவ்வொரு விவசாயிக்கும் மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

கடந்த ஆண்டு தஞ்சாவூரில் தொடங்கிய இலை கருகல் நோய் செங்காத்தங்குடி, பெரியகோட்டை வரை நீடித்தது. சாக்கோட்டை பகுதியில் 2 ஆயிரம் எக்டேர் நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டன.

வேளாண் அதிகாரி ஒருவர் கூறும்போது: விவசாயிகள் இந்த ஆண்டாவது மாற்று ரகங்களான கோ.51, டி.கே.எம்.13 போன்ற புதிய ரகங்களை தேர்வு செய்து, தரமான விதை சான்று பெற்ற விதைகளை வாங்கி நெல் பயிரிட வேண்டும்.

தரமான விதைகளை வாங்குவதன் மூலம் முளைப்புதிறன் அதிகமாகவும், வீரியமாகவும், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு தன்மை கொண்ட பயிர்களை உருவாக்கலாம்.

தரமற்ற சான்றில்லாத விதைகளையோ, தன்னிடம் உள்ள பழைய விதைகளையோ பயன்படுத்தும்போது கலப்பு அதிகமாகவும், முளைப்பு திறன் குறைந்ததாகவும் இருக்கும்.

மக்களும் டீலக்ஸ் என்ற ஒரே ரகத்தின் மாயையை விடுத்து சத்துள்ள பல்வேறு ரகங்கள் உள்ளன என்பதை தெரிந்து, அவற்றை சாப்பிட வேண்டும், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சங்கராபுரம் பகுதியில் கம்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

சங்கராபுரம், : சங்கராபுரம் பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வருகின்றது. இதில் கரும்பு, நெல், மக்காசோளம், எள், கேழ்வரகு, மணிலா உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். சாத்தனூர் அணையில் இருந்து கடந்த பிப்ரவரி மாதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனை தொடர்ந்து சங்கராபுரம், தேவபாண்டலம், வடசிறுவள்ளூர், ராமராஜபுரம், மைக்கேல்புரம், சவேரியார்பாளையம், சு.குளத்தூர், பாண்டலம், அரசம்பட்டு, பாலப்பட்டு,

கள்ளிப்பட்டு, செம்பராம்பட்டு, மேல்சிறுவள்ளூர், அருளம்பாடி, வடபொன்பரப்பி, வடகீரனூர், பாக்கம், புதூர், புதுப்பட்டு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை உழுது பயிரிட தொடங்கினர். இந்நிலையில் கால்வாய்களில் வரும் தண்ணீரை பயன்படுத்தியும் கிணற்றில் இருக்கும் தண்ணீரை பயன்படுத்தியும் பருவகால பயிரான கம்பு, சோளம் உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். தற்போது சங்கராபுரம் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மழையால் தளிர் விடும் தேயிலை

வால்பாறை, : வால்பாறை பகுதியில் 25 ஆயிரம் ஏக்கரில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இளம் தளிர்களில் தயாரிக்கப்படும் தேயிலை சுவை அதிகமாக இருக்கும் என்பதாலும், தேயிலைச் செடிகள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் வளர்ந்தால் தேயிலை பறிக்க முடியாது என்பதாலும் தேயிலைச் செடிகளை குறிப்பிட்ட அளவு வெட்டி (கவாத்து) விடுவது வழக்கம். தொடரும் சாரல் மழையால் செடிகள் தளிர்க்க துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தொடர்மழையால் ஈளாடா தடுப்பணை நிரம்பியது

கோத்தகிரி : கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தொடர் மழையால் கோத்தகிரி ஈளாடா அணை மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கிணறு உள்ளிட்ட நீர் நிலைகள் நிரம்பி வருகின்றது.

கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள வசிக்கும் பொதுமக்கள் மற்றும் வணிக வளாகங்கள் ஈளாடா தடுப்ணை நீரையே நம்பியுள்ளனர். 240 அடி நீளமும், 200 அடி அகலமும், 9 அடி ஆழமும் கொண்ட இந்த தடுப்பணை கடந்த மாதம் வறண்ட நிலையில் காணபட்டதால் குடிநீர் பிரச்னையை சமாளிக்க புதூர் பகுதியிலிருந்து வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கட்டது. இந்நிலையில், முக்கிய நீர் ஆதாரமான

ஈளாடா அணையின் நீர்மட்டம் உயர்ந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இன்னும் ஓரிரு நாட்கள் தொடர்ந்து மழை பெய்யும்பட்சத்தில் அடுத்த 2 மாத காலத்திற்கு குடிநீர் பிரச்னை இருக்காது என பேரூராட்சி தலைவர் வாப்பு தெரிவித்தார்.

## பச்சை தேயிலை வரத்து குறைவு தேயிலை தூள் உற்பத்தி பாதிப்பு

மஞ்சூர், : நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில் தேயிலை விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இதை முன்னிட்டு மஞ்சூர், கைகாட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, உள்ளிட்ட 8 கூட்டுறவு ஆலைகளும் ஏராளமான தனியார் தொழிற்சாலைகளும் இயங்கி வருகிறது. விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களில் இருந்து பறிக்கும் பச்சை தேயிலையை மேற்படி தொழிற்சாலைகளுக்கு விநியோகித்து வருகிறார்கள். இந்நிலையில் குந்தா பகுதியில் கடந்த நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை நிலவிய பனிப்பொழிவை தொடர்ந்து கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து படி,படியாக குறைந்து வந்தது.

இதை தொடர்ந்து பனியின் தாக்கம் அடியோடு குறைந்து தற்போது கடும் வெயில் நிலவுகிறது. இந்நிலையில் கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக மழை பொழிவு அறவே இல்லாததால் வறட்சியின் தாக்கம் அதிகரித்து பச்சை தேயிலை வரத்து பல மடங்கு குறைந்துள்ளது. சீசன் அல்லாத காலங்களில் தினசரி 15 ஆயிரம் முதல் 18 ஆயிரம் கிலோ வரை தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து இருக்கும். ஆனால் தற்போது மழையின்மையால் ஏற்பட்டுள்ள வறட்சியால் நாளொன்றுக்கு வெறும் 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் கிலோ வரை மட்டுமே பசுந்தேயிலை வரத்து உள்ளது. இதனால் தினசரி 3 ஷிப்டுகள் இயங்கி வந்த பெரும்பாலான தொழிற்சாலைகளிலும் தற்போது 1 ஷிப்டு மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. இதனால் தேயிலைதூள் உற்பத்தி பெருமளவு குறைந்தது.

## விவசாயிகள் சங்க கூட்டம்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி தாலுகா, தமிழக விவசாயிகள் சங்க கூட்டம், பல்லடம் ரோட்டில் உள்ள மண்டபத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கோபாலரத்தினம், செயலாளர் முத்துசாமி, துணை செயலாளர் சவுந்தராஜ், பொருளாளர் ஆறுசாமி, கந்தவடிவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின்போது, தமிழக அரசு கொப்பரை கொள்முதல் செய்வதாக அறிவித்துள்ளது.

கொப்பரை உற்பத்தி செய்ய கிலோவுக்கு ரூ.140 ஆகிறது. இது சம்பந்தமாக பேச, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும், மாவட்ட நிர்வாகமும் எங்கள் சங்கத்தை அழைத்து கொப்பரையில் உள்ள நிலைப்பாட்டை கேட்டறிய வேண்டும். தற்போது விவசாயிகள் வறட்சி காரணமாக வேதனையில் உள்ளனர். எனவே, அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## குன்னூர் ஏல மையத்தில் 96% தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 22வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 7.98 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 4.86 லட்சம் கிலோவும். டஸ்ட் ரகம் 3.20லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று 96 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

இதில் அனைத்து ரக தேயிலை தூளுக்கும் ரூ.1 விலை குறைந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.82 முதல் ரூ.84, உயர் வகை ரூ.100 முதல் ரூ.140, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.93 முதல் ரூ.98 வரையிலும் உயர் வகை ரூ.110 முதல் ரூ.160 வரை விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.252, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.219 விலை வழங்கப்பட்டது. அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய

நாட்களில் நடக்கிறது. இதில் மொத்தம் 9.14லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது

**திருச்சியில் 2 லட்சம் மரக்கன்று நடும் பணி துவக்கம்**

திருச்சி : ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில், 2016ம் ஆண்டுக்கான மரக்கன்றுகள் நடும் பணி துவங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தமிழகம், புதுச்சேரியில் 40 லட்சம் மரக்கன்றுகள் நடுவதை இலக்காக கொண்டு செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பசுமைக்கரங்களின் வல்லுனர்கள், விவசாயிகளின் நிலத்துக்கு நேரடியாக சென்று அவர்களுக்கு மரம் வளர்க்கும் முறைகள், ஆலோசனைகள் இலவசமாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் பள்ளிக்குழந்தைகளுக்கு மரங்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கி அவர்களின் மூலமாகவே மரக்கன்றுகள் உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் சார்பாக திருச்சி மாவட்டத்தில் 2 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கான திட்டம் பெரியநாயகி சத்திரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நேற்று துவங்கியது.

இத்திட்டத்தை திருச்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆனந்தி மரக்கன்று நட்டு துவங்கி வைத்தார். ஆஎம்எஸ்ஏ திட்ட அலுவலர் சுப்பிரமணியன், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகரன், இனாம் பெரிய நாயகிசத்திரம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அருள்மொழி வர்மன், மாணவர்கள், ஆசிரியர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

ஈஷா பசுமைக் கரங்கள் திட்டமானது, ஈஷா அறக்கட்டளையால் நிறுவப்பட்ட ஒரு சுற்றுச்சூழல் திட்டம். மரம் நடுவதால் தமிழகத்தின் பசுமைப் பரப்பை 10 சதவீதம் அதிகரிக்கும் நோக்கத்துடன் துவங்கப்பட்டது. அேத நோக்கத்தில் தமிழகத்தில் மட்டும் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்களிப்போடு, 2.80 கோடிக்கும் மேற்பட்ட மரங்களை வெற்றிகரமாக நட்டு வளர்த்துள்ளது. 2006ம்

ஆண்டு ஒரே நாளில் 2.5 லட்சம் தன்னார்வத் தொண்டர்களை கொண்டு 8,56,000 மரக்கன்றுகள் நடப்பட்டது. இதன் மூலம் கின்னஸ் உலக சாதனையில் இத்திட்டம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் ஆண்டுதோறும் 30 லட்சம் டன் உணவு உற்பத்தியை டெல்டா மாவட்டங்கள் கொடுக்கிறது வேளாண்மை ஆணையர் பேச்சு

திருவையாறு : தமிழகத்தில் ஆண்டுதோறும் 125 லட்சம் டன் உணவு உற்பத்தியில் 30 லட்சம் டன் உணவு உற்பத்தியை காவிரி டெல்டா மாவட்டங்கள் கொடுக்கிறது என வேளாண்மை ஆணையர் ராஜேந்திரன் தெரிவித்தார். தஞ்சை மாவட்டம் திருவையாறு அடுத்த வில்லியநல்லூரில், குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை, இயந்திர நடவு மற்றும் பாய்நாற்றங்கால் விதை தெளித்து வேளாண்மை துறை ஆணையர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் விவசாயிகளிடையே பேசியதாவது:

வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதற்கு தமிழக முதல்வர் டெல்டா மாவட்டங்களுக்கு குறிப்பாக தஞ்சாவூர், திருவாரூர், நாகை, கடலூர், திருச்சியில் ஒரு பகுதி, அரியலூரில் ஒரு பகுதி ஆகிய 6 மாவட்டங்களுக்கு ரூ.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். தமிழகத்தில் ஆண்டு தோறும் 125 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் 30 லட்சம் டன் உற்பத்தியை தஞ்சை டெல்டா மாவட்டங்கள் கொடுக்கிறது.

ஆகவே ரூ.58 கோடி இந்த மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 3 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 3.26 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,000 மானியதொகை மற்றும் இடு பொருள், நுண்ணூட்டம், ரிங் சல்பேட் ஆகியவையும் இலவசமாக கொடுக்கப்படுகிறது. இதை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள

வேண்டும். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு 100 விவசாயிகளுடன் சீனா சென்று வந்தோம்.

1,500 கி.மீ. தூரத்தை ரயில் மூலம் (300 கி.மீ வேகத்தில்) சென்று பார்வையிட்டோம். 1,500 கி.மீ. தூரமும் இரண்டு பக்கமும் ஒரே சீராக நெல் விளைவிக்கப்பட்டு இருந்தது. இவைகளை 5 மணி நேரத்தில் பார்த்தோம். அதைப்போன்று நாம் விவசாயத்தில் முன்னேற வேண்டும். இன்னும் 10 ஆண்டுகள் கழித்து விவசாயம் செழிப்பாக அமையும். எதிர்காலத்தில் விவசாயிகள் தான் பெரிய பணக்காரர்களாக இருப்பார்கள் என்றார்.

கூடுதல் ஆணையர் ஜெயசுந்தர், இணை ஆணையர் சீனிவாசன், துணை ஆணையர்கள் கிருஷ்ணகுமார், இளஞ்செழியன், திருவையாறு உதவி வேளாண்மை இயக்குநர் மீனாட்சி சுந்தரம், வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன், ராஜகோபால், உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலமுருகன், சந்திரசேகரன், இளந்திரையன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் மண்டல வாரியாக தேசிய நெல் திருவிழா சிறப்பு கூட்டத்தில் தீர்மானம்

திருத்துறைப்பூண்டி : தமிழகத்தில் மண்டல வாரியாக தேசிய நெல் திருவிழா நடத்துவது என்று சிறப்பு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பண்ணையில் தேசிய அளவிலான நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர்களின் சிறப்பு கூட்டம் கேரளா மாநில ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் ஸ்ரீதர் தலை மையில் நடந்தது.

கிரியேட் சேர்மன் துரைசிங்கம், நிர்வாக அறங்காவலர் பென்னம்பலம் முன்னிலை வகித்தனர். கிரியேட் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் கண்ணா வரவேற்றார். கூட்டத்தில் நெல் திருவிழாவை தமிழகத்தில் மண்டல வாரியாக மதுரை, கோவை, திருச்சி, சென்னை மாவட்ட தலைநகரில் நடத்துவது. அனைத்து விவசாயிகளுடைய கடன்களையும் தள்ளுபடி செய்ய தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்கு மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் தடை சட்டம் கொண்டுவர வேண்டும்.

ஆறு, வாய்க்கால்கள், கண்ணி, ஏரி, குளம், குட்டைகளில் குடிசை அமைத்து ஆக்கிரமித்து உள்ள ஏழை மக்களுக்கு வசிக்க மாற்று ஏற்பாடு செய்வதுடன் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றி பொது பயன்பாட்டுக்கும், போக்குவரத்துக்கும் கொண்டுவர வேண்டும். இயற்கை வேளா ண்மை செய்ய ஏக்கருக்கு ரூ.5,000 வீதம் மானியம் வழங்க வேண்டும். கர்நாடக மாநில ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணபிரசாத், மேற்கு வங்காளம் அலாவுதின், ஒரிசா சாரங்கி, தெலங்கானா நரசிம்ம ரெட்டி, ஆந்திரா ஜேசு மற்றும் அந்தந்த மாநில பிரதிநிதிகள் பங்கேற்றனர். தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன் நன்றி கூறினார்.

## நாகை மாவட்டத்தில் 170.70 மி.மீட்டர் மழை பதிவு

நாகை : நாகை மாவட்டத்தில் 170.70 மி.மீட்டர் மழை பதிவானது. நாகை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாகவே கடும் வெயில் சுட்டெரித்து வருகிறது. பொதுமக்கள் வெயிலின் தாக்கத்தை குறைத்து கொள்ள இளநீர், பழ பானங்களை அருந்தி ஓரளவுக்கு சமாளித்து வந்தனர். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பெய்த மழை, நாகை மாவட்டத்தில் மழை பெய்யாதா என பொதுமக்களை ஏங்க வைத்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 முதல் 11.30 மணி வரை மிதமான மழை பெய்தது.

மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்): நாகப்பட்டினம் 6.30, மயிலாடுதுறை 21.40, சீர்காழி 8, வேதாரண்யம் 43.80, தரங்கம்பாடி 8, திருப்பூண்டி 23.40, தலைஞாயிறு 36.80, கொள்ளிடம் 23 என மாவட்டத்தில் பெய்த மொத்த மழையளவு 170.70 மி.மீட்டராகும். மாவட்டத்தில் சராசரியாக 18.97 மி.மீட்டர் மழை பதிவானது.

## சிறுதானியங்கள் சாப்பிட்டால் ஒற்றை தலைவலி ஓடிவிடும்

பழநி, : ஒற்றை தலைவலி நீங்க சிறுதானியங்கள் சாப்பிடலாமென சித்த மருத்துவர் மகேந்திரன் ஆலோசனை வழங்கி உள்ளார். அரிசி மற்றும் கோதுமையை விட சிறுதானியங்களில் அதிகளவு ஊட்டசத்து இருப்பதாக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

றுதானியங்களில் புரதம், நார்ச்சத்து, நியாசின், தயமின், ரிபோபிளேவின் போன்ற வைட்டமின்களும், இரும்புச்சத்து, மெக்னீசியம், கால்சியம் மற்றும் பொட்டாசியம் ஆகியவையும் அதிக அளவில் காணப்படுகின்றன.

மேலும், சிறுதானியங்களில் உள்ள பைட்டிக் அமிலம் எனப்படும் தாவர ஊட்டச்சத்து மனித உடலில் உள்ள கொழுப்பின் அளவை குறைப்பதனால், புற்றுநோயினை வெகுவாக குறைக்கின்றது. உடல் ஆரோக்கியத்தில் சிறுதானியங்களின் பங்கு குறித்து பழநி அரசு மருத்துவமனையின் சித்த மருத்துவர் டாக்டர்.மகேந்திரன் கூறியதாவது, சிறுதானியங்கள் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் நுண்கிருமிகளின் வளர்ச்சியைத் தடுக்கின்றன.

பெருங்குடலின் செயல்பாட்டைச் சீராக்குகின்றன. உடல்நலத்திற்கு ஏதுவான கிருமிகளின் வளர்ச்சியை தூண்டுகின்றன. உடல் சுறுசுறுப்பிற்குக காரணமான செராட்டினின் உற்பத்திக்கு உதவுகின்றன. சிறுதானியங்களில் அதிக அளவில் காணப்படும் மெக்னீசியம், தீவிர ஆஸ்துமா மற்றும் ஒற்றை தலைவலியை தடுக்கிறது. சிறுதானியங்கள் ரத்த அழுத்தத்தை சீராக்குவதால் இதய நோய்களில் இருந்து பாதுகாப்பளிக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள நியாசின் (வைட்டமின் பி3) ரத்தத்தில் அதிக அளவு கொழுப்பு சேர்வதை தடுக்கிறது.

அன்றாடம் சிறுதானியங்களை பயன்படுத்துவோருக்கு 2ம் வகை (இன்சுலின் சார்ந்த) சர்க்கரை நோய் வருவதில்லை. சிறுதானியங்களை அதிக அளவில் உணவு பயன்பாட்டில் சேர்க்கும்போது, ரத்தத்தில்

சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுகின்றது. சிறுதானிய பயன்பாட்டினால் பெண்களுக்கு பித்தப்பையில் கற்கள் வருவது தடுக்கப்படுகின்றது. அதிக அளவு நார்ச்சத்து மிகுந்த சிறுதானியங்கள் புற்றுநோய் வருவதைத் தடுக்கின்றன. உடல் பருமன் கொண்டவர்கள் சிறுதானியங்களை பயன்படுத்தும்போது, உடல் எடை சீராகக் குறைகின்றது. எலும்பு வளர்ச்சிக்கும், சராசரி ஆரோக்கியத்திற்கும் சிறுதானியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

**கூடுதல் லாபம் கிடைக்க குதிரைவாலி பயிரிடலாம்**

பழநி, : கூடுதல் லாபம் கிடைக்க குதிரைவாலி பயிரிடலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் கடந்த வாரம் 2 நாட்கள் லேசான மழை பெய்தது. இதனால் மானாவாரி நிலங்களில் ஈரப்பதம் ஏற்பட்டுள்ளது. கிணற்றுப் பாசனம் உள்ளவர்கள் தங்களது நிலங்களில் குறுகிய காலப் பயிர்களை பயிரிட ஆரம்பித்துள்ளனர். குறுகிய காலப்பயிரில் கூடுதல் லாபம் கிடைக்க குதிரைவாலி பயிரிடலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். குதிரைவாலி பயிரிட கோ 1, கோ (கேவி)2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும்.

இறவையாக சித்திரை மற்றும் ஆடிப் பட்டங்களிலும், மானாவாரியாக ஆடி மற்றும் புரட்டாசிப் பட்டங்களிலும் குதிரை வாலியைப் பயிரிடலாம். கை விதைப்பு முறையாக இருந்தால் ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதையும், விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பாக இருந்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதையும் பயன்படுத்த வேண்டும். இடைவெளி 22.5 சென்டிமீட்டருக்கு 10 சென்டிமீட்டர் என்று இருக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி, பின் உழ வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் சாம்பல் சத்துகளைப் பரிந்துரைக்கப்பட்ட அளவில் இட வேண்டும். வரிசை

விதைப்பு செய்திருந்தால் 3 முறை இடை உழவும், ஒரு முறை கை களையும் எடுக்க வேண்டும். சரியான பருவத்தில் விதைக்கும்போது எந்த வகை பூச்சி மற்றும் பூஞ்சாணமும் அதிகமாக இந்தப் பயிரை தாக்குவதில்லை.

கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். தானியங்களைப் பிரிக்க பின் உள்ள கட்டையையும் நன்கு உலர்க்கி சேமித்து வைத்தால் ஆண்டும் முழுவதும் கால்நடைகளுக்குத் தீவனமாகத் தரலாம். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## 1 லட்சம் மரக்கன்று நட ஆலோசனை

மானாமதுரை, : மானாமதுரை வட்டாரத்தில் குறைந்துவரும் மழைப்பொழிவை மீண்டும் அதிகரிக்கும் வகையில் 1 லட்சம் மரக்கன்று நட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக மானாமதுரை பகுதியில் மழைப்பொழிவு குறைந்து வருகிறது. மழைப்பொழிவை அதிகரிக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் தாசில்தார் சிவக்குமாரி நடவடிக்கை மேற்கொண்டார்.

இதன்படி மானாமதுரையில் உள்ள தன்னார்வலர்கள், சங்கங்கள், அரசியல் பிரமுகர்களுடன் இணைந்து மானாமதுரை தாலுகாவில் 1 லட்சம் மரக்கன்று நட முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஆலோசனைக்கூட்டம் தாசில்தார் சிவக்குமாரி தலைமையில் நேற்று நடந்தது. மானாமதுரை வர்த்தகர் சங்கம், ஓட்டல் பேக்கரி உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகள், வக்கீல்கள் ஆதிமூலம், முத்துக்குமார், பாபா மெட்ரிக் பள்ளி தாளாளர் கபிலன், சிஎஸ்ஐ பள்ளி மாணவர் விடுதி காப்பாளர் ராஜா, தமுஎகச நிர்வாகி தேவதாஸ், அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர். பின் தாலுகா அலுவலக வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை சோலையார் அணை நீர்மட்டம் 22 அடியாக உயர்ந்தது



வால்பாறை,

வால்பாறை மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சோலையார் அணையின் நீர்மட்டம் 22 அடியாக உயர்ந்து உள்ளது.

கோடை வெயில்

கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை மலைப்பகுதியாக உள்ளது. எங்கு பார்த்தாலும் பச்சை பசேல் என தேயிலை தோட்டங்களாக இருக்கும். மேலும், நீரோடைகளும் அதிக அளவில் உள்ளன. எப்போதும்

குளு, குளு என இருக்கும் வால்பாறை கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் கோடை வெயில் சுட்டெரித்தது.

வெயிலின் தாக்கத்தால் வால்பாறை மற்றும் சுற்று வட்டார பகுதி மக்கள் மிகவும் அவதியடைந்தனர். கோடை வெயிலின் தாக்கத்தால் நீர் நிலைகளும் வறண்டன. தேயிலை செடிகள் கருகின. இதனால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது. மேலும், பொதுமக்கள் மற்றும் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

விடிய, விடிய மழை

இந்த நிலையில் கடந்த மே மாதம் தொடக்கத்தில் மழை பெய்ய தொடங்கியது. அதனை தொடர்ந்து அவ்வப்போது கன மழையும், மிதமானதுமாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலையில் வால்பாறையில் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து இரவு முழுவதும் விடிய, விடிய மழை பெய்தது.

இதன் காரணமாக சோலையார் அணையின் நீர்மட்டம் உயர தொடங்கி இருக்கிறது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணையின் நீர்மட்டம் கோடை வெயிலின் தாக்கத்தில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு 2 அடியாக குறைந்து இருந்தது.

தற்போது நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சோலையார் அணைக்கு வினாடிக்கு 210.65 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 22.68 அடியாக உயர்ந்துள்ளது. பாசனத்துக்காக அணையில் தண்ணீர் தேங்கி வைக்கப்படுவதால் அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை. தொடர்ந்து கன மழை பெய்தால் அணையின் நீர்மட்டம் மேலும் வெகுவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மழை அளவு

நேற்று காலை 8 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேர நிலவரப்படி வால்பாறையில் 25 மி.மீ. மழையும், சோலையார் அணை பகுதியில் 9

மி.மீ. மழையும், நீராரில் 15 மி.மீ. மழையும், சின்னக்கல்லாரில் 17 மி.மீ. மழையும் பதிவாகி இருக்கிறது.

**காற்றாலை, சூரிய வெப்ப மின்சாரம்**




முதல்–அமைச்சர் ஜெயலலிதா, கடந்த வாரம் சென்னை கோட்டையில், மாநிலத்தில் உள்ள மின்சார நிலைமை குறித்து ஒரு விரிவான ஆய்வு நடத்தினார். பல்வேறு மின்உற்பத்தி திட்டங்கள் மூலமாக தற்போது எவ்வளவு மின்சாரம் கிடைக்கிறது?, எவ்வளவு மின்சாரம் தேவை இருக்கிறது? என்பதை அதிகாரிகளிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்து விவரங்களை சேகரித்துக் கொண்டார். பொதுவாக தமிழ்நாடு மின்பகிர்மானக்கழகத்தின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டே, தனியாரிடம் இருந்து கூடுதல்விலைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்துவிடுகிறீர்கள், இதனால் தேவையற்ற இழப்பீடு ஏற்படுகிறது என்பதுதான்.

தமிழ்நாடு மின்சாரவாரியத்துக்கு சொந்தமான மின்நிலையங்கள் மூலமாகவும், தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசாங்க மின்சாரநிலையங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு கிடைக்கும்

ஒதுக்கீட்டின் மூலமாகவும் மின்சாரம் கிடைக்கிறது. இதுபோக, ஏற்படும் பற்றாக்குறையை சமாளிக்க, தமிழ்நாட்டில் உள்ள தனியார் மின்சாரநிலையங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் மின்சாரம் அதிகவிலைக்கு வாங்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள மின்நுகர்வோருக்கு குறைந்தவிலைக்கு வினியோகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள தனியார் மின்உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாடு மின்பகிர்மானக்கழகத்துக்கு மட்டுமே விற்கவேண்டும் என்பதை கட்டாயப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மின்சார சட்டத்தில் பிரிவு 11 சேர்க்கப்பட்டது. தற்போது தினமும் ஏறத்தாழ 30 கோடி யூனிட் மின்சாரம் தேவைப்படுகிறது. இதில், 5 கோடி முதல் 7 கோடி யூனிட் வரை காற்றாலை மூலம் கிடைக்கும் மின்சாரமாகும்.

முதல்–அமைச்சர் கேட்டபோது, தமிழ்நாடு மின்பகிர்மானக்கழக அதிகாரிகள், தமிழகத்தின் இப்போதைய மின்சாரத்தேவை 15 ஆயிரத்து 500 மெகாவாட். இதில் இனி காற்று ‘சீசன்’ வரப்போவதால் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் மெகாவாட் காற்றாலை மின்சாரம் கிடைக்கும். இப்போதுள்ள உற்பத்தி அளவை எல்லாம் எடுத்து 17 ஆயிரத்து 500 மெகாவாட் வரை மின்சாரத்தேவை வரை நம்மால் சமாளிக்கமுடியும் என்று உறுதி கூறியவுடன், முதல்–அமைச்சர் உடனடியாக தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட உத்தரவிட்டுள்ளார். இதன்காரணமாக, ஆண்டுக்கு ரூ.900 கோடி மின்பகிர்மானக்கழகத்துக்கு மிச்சமாகிறது. தமிழ்நாட்டை பொறுத்தளவில், இயற்கையின் அருட்கொடையாக காற்றும், வெயிலும் அபரிமிதமாக இருக்கிறது. ஆண்டுக்கு 300 நாட்கள் வெயில் அடிக்கிறது. காற்றும் பல மாதங்களில் பலமாக வீசுகிறது. எனவே, இந்த மரபுசாரா மின்உற்பத்தி நிலையங்களை அமைக்க மூலதனசெலவு அதிகமாக இருந்தாலும், சூரிய வெப்பம் மற்றும் காற்றாலை மூலம் மின்சார உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து, அதை நிறைவேற்ற தீவிர முயற்சிகளை எடுக்க வேண்டும்.

சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டும் என்றால்,

நிலம் அதிகமாக தேவைப்படும். சூரியவெப்பத்தின் மூலம் 1 மெகாவாட் மின்சாரம் உற்பத்திசெய்யும் நிலையத்தை அமைக்க 5 ஏக்கர் நிலம் தேவை. ஆனால், வெளிநாடுகளில் இந்த நிலத்தையும் மிச்சப்படுத்த நீர்நிலைகளில் சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் பேனல்களை அமைக்கும் முறை இருக்கிறது. இதற்கு மிதக்கும் சோலார் மின் உற்பத்தி நிலையங்கள் என்று பெயர். ஆங்கிலத்தில் 'புளோட்டோவோல்டைக்ஸ்' என்று பெயர். இந்தியாவில் தற்போது மேற்கு வங்காளத்திலும், கேரளாவிலும் தலா 10 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 89 அணைகளும், 39 ஆயிரத்து 202 ஏரிகளும் மற்றும் சிறிய அளவில் எண்ணற்ற குளம், குட்டைகளும் இருக்கின்றன. ஆக, தமிழ்நாட்டில் வாய்ப்பு நிறைய இருக்கிறது. இத்தகைய மின்சார நிலையங்கள் அமைப்பதன் மூலம், மின்சாரமும் உற்பத்தி செய்யமுடியும். தண்ணீரும் ஆவியாவதைத் தடுக்கமுடியும். தனியாக இடமும் தேவையில்லை. மரபுசாரா எரிசக்தி நிலையங்கள் அமைக்க மத்திய அரசாங்கத்தின் உதவியைப்பெற்று, தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு இந்த திட்டத்தை செயல்படுத்தமுடியும் என்பதை மின்பகிர்மானக்கழகம் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும்.

# குமரி மாவட்டத்தில் 'திடீர்' மழை பெய்தது



கொளுத்தும் வெயிலுக்கு இடையே குமரி மாவட்டத்தில் நேற்று திடீரென மழை பெய்தது.

<u>ஓயாத கோடை வெயில்</u>

கோடை காலம் முடிவடைந்த பின்னரும், கோடை வெயில் குறையாமல் இருந்து வந்தது. ஆண்டுதோறும் கேரளாவில் ஜூன் மாதம் தொடக்கத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு இதுவரை தென்மேற்குப் பருவமழை தொடங்கவில்லை.

கேரளாவில் பருவமழை தொடங்கும்போது எல்லையோரம் அமைந்துள்ள குமரி மாவட்ட பகுதிகளிலும் மழை பெய்வது வழக்கம். இதற்கிடையே கேரளாவில் தென்மேற்கு பருவமழை ஓரிரு நாளில் தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

<u>மழை</u>

இந்தநிலையில் நேற்று முன்தினம் குமரி மாவட்டத்தில் லேசான மழை பெய்தது.

நேற்று காலை நாகர்கோவில் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் வழக்கம்போல் வெயில் இருந்தது. மதியம் சுமார் 1.15 மணிக்கு திடீரென வானம் கருமேகக்கூட்டங்களுடன் காணப்பட்டது. அதைத்தொடர்ந்து

சில நிமிடங்களில் மழை பெய்யத்தொடங்கியது. இந்த மழை சுமார் 15 நிமிடம் நீடித்தது. அதுவும் சாரல் மழையாக பெய்தது. அதன்பிறகு மீண்டும் வெயில் இருந்தது. பின்னர் மாலை சுமார் 4.45 மணி அளவில் மீண்டும் மழை பெய்தது. இந்த மழையும் சில நிமிடங்கள் வரை மட்டுமே பெய்தது.

இதேபோல் கொல்லங்கோட்டிலும் மழை பெய்தது. நேற்று மதியம் 1.30 மணியளவில் பெய்யத்தொடங்கிய மழை சுமார் 20 நிமிடம் கொட்டி தீர்த்தது. இதனால், சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இதுபோல், கொல்லங்கோட்டை சுற்றியுள்ள மேடவிளாகம், கண்ணநாகம், ஊரம்பு, கச்சேரிநடை, நீரோடி, மார்த்தாண்டன்துறை போன்ற பகுதிகளிலும் மழை பெய்தது. நித்திரவிளை, குலசேகரம், மார்த்தாண்டம், திருவட்டார், ஆற்றூர் போன்ற பகுதிகளில் லேசான சாரல் மழை பெய்தது. இதேபோல் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

<u>மழை அளவு</u>

நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:–

பெருஞ்சாணி– 3.6, சிற்றார் 1– 4.6, சிற்றார் 2– 3, மாம்பழத்துறையாறு – 1, நாகர்கோவில்– 1, பாலமோர்– 4.2, கொட்டாரம்– 14.4, குளச்சல்– 4.8, கோழிப்போர்விளை– 1.3, முள்ளங்கினாவிளை– 2, புத்தன் அணை– 4 என்ற அளவில் மழை பெய்தது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி பேச்சிப்பாறை அணைப்பகுதியில் 5.6 மி.மீ. மழை பெய்திருந்தது.

**மீனவர்கள் வலையில் சிக்கிய அதிசய மீன்கள்**



திருவனந்தபுரம்,

திருவனந்தபுரத்தை அடுத்த கோவளம் கடலில் நேற்றுமுன்தினம் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கரை திரும்பிய போது அவர்களின் வலையில் வித்தியாசமான மீன்கள் ஏராளமாக சிக்கி இருந்தன. கண்ணாடி போல் பள பளப்பாக காணப்பட்ட அந்த மீன்கள் சூரிய வெளிச்சத்தில் தக தகவென பிரதிபலித்தது. பல மீனவர்களின் வலையில் இத்தகைய மீன்கள் ஏராளமாக சிக்கி இருந்தன.

இதுபற்றி மீனவர்கள் மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் விரைந்து வந்து கண்ணாடி போன்ற மீன்களை கைப்பற்றி ஆய்வுக்கு கொண்டு சென்றனர்.

இதுகுறித்து கோவளம் மீனவர்கள் கூறும்போது, இது போன்ற மீன்களை நாங்கள் இதுவரை பிடித்ததில்லை. இப்போது தான் வலையில் சிக்கி உள்ளது. இது எந்தவகை மீன் என்பதை மீன்வளத்துறையினர் தான் ஆராய்ந்து கூற வேண்டும் என்றனர்.

**தஞ்சையில் இருந்து வேலூருக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது**



தஞ்சையில் இருந்து வேலூருக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல், தமிழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர்

பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது.

1,200 டன் புழுங்கல் அரிசி

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளில் இருந்து ஏற்றிவரப்பட்ட 1,200 டன் புழுங்கல் அரிசி மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு லாரிகள் மூலம் நேற்று கொண்டுவரப்பட்டன. பின்னர் அந்த அரிசி மூட்டைகள் தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் வேலூருக்கு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

## குறுவை சாகுபடி திட்டத்தை செயல்படுத்த ரூ.19 கோடி நிதி ஒதுக்கீடு வேளாண்மைத்துறை ஆணையர் தகவல்

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை தொகுப்பு சிறப்பு திட்டத்துக்கு ரூ.20 கோடியே 79 லட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது என வேளாண்மை ஆணையர் ராஜேந்திரன் கூறினார்.

குறுவை தொகுப்பு திட்டம்

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் குறுவை தொகுப்பு சிறப்பு திட்டம் குறித்து திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட வேளாண்மை துறை அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் நேற்று நடந்தது. திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் முன்னிலை வகித்தார். வேளாண்மை ஆணையர் ராஜேந்திரன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

திருவாரூர் மாவட்டத்தில் 38 ஆயிரம் ஏக்கர் பரப்பிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பிலும், கடலூர் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிலும் எந்திர நடவு பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்துக்கு நெல் நுண்ணூட்ட சத்து 12 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கும், சிங்சல்பேட் 30 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கும், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு நெல் நுண்ணூட்ட சத்து 20 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கும், சிங்சல்பேட் 27 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கும்,

கடலூர் மாவட்டத்துக்கு நெல் நுண்ணூட்ட சத்து 3 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கும் சிங்சல்பேட் 6 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்¢புக்கும் விலையில்லாமல் வழங்க இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரூ.20 கோடியே 79 லட்சம்

திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தின் வெண்ணாறு பகுதியில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் உழவு செய்து பசுந்தாள் உர பயிர் விதைகள் வழங்கவும், காவிரி பகுதியில் திருவாரூர் மாவட்டத்துக்கு 6 ஆயிரம் ஏக்கர் பரப்பிலும் நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு ஆயிரம் ஏக்கர் பரப்பிலும் உழவு செய்து பயறு வகை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த திருவாரூர் மாவட்டத்துக்கு ரூ.20 கோடியே 79 லட்சத்து 40 ஆயிரமும், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு ரூ.10 கோடியே 91 லட்சமும், கடலூர் மாவட்டத்துக்கு ரூ.2 கோடியே 31 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தி விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் கூடுதல் இயக்குனர்கள் சுந்தர், ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர்கள் மயில்வாகணன் (திருவாரூர்), சேகர் (நாகப்பட்டினம்), ஹரிதாஸ் (கடலூர்) உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி திட்டத்தை செயல்படுத்த ரூ.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வேளாண்மைத்துறை ஆணையர் கூறினார்.

ஆய்வுக்கூட்டம்

முதல்-அமைச்சர் ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்டு டெல்டா மாவட்டங்களுக்கு செயல்படுத்தப்படுகின்ற குறுவை சாகுபடி தொகுப்பு

திட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் வேளாண்மைத்துறை ஆணையர் ராஜேந்திரன் தலைமையில் நேற்று நடந்தது. கலெக்டர் சுப்பையன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் வேளாண்மை கூடுதல் இயக்குனர் ஜெயசுந்தர், தஞ்சை, அரியலூர் மற்றும் திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர்கள், கூட்டுறவு இணைப்பதிவாளர்கள், வேளாண்மைத்துறை துணைஇயக்குனர்கள், செயற்பொறியாளர்கள், மின்வாரிய செயற்பொறியாளர், வேளாண்மை உதவி இயக்குனர்கள் மற்றும்¢ அனைத்து வட்டார வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆணையர் பேச்சு

கூட்டத்தில் வேளாண்மைத்துறை ஆணையர் ராஜேந்திரன் பேசியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை செயல்படுத்திட ரூ.19 கோடியே 2 லட்சத்து 40 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி திட்டத்தில் விலையில்லா எந்திர நடவு செய்ய 40 ஆயிரம் ஏக்கருக்கு ரூ.16 கோடி பெறப்பட்டுள்ளது. இதுவரை 413 ஏக்கர் பரப்பில் எந்திரம் மூலம் நடவு பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மீதமுள்ள பரப்பு ஜூலை 2 அல்லது 3-வது வாரத்தில் முடிவடையும்.

நுண்ணூட்ட உரக்கலவை 12 ஆயிரம் ஏக்கருக்கு 60 டன் வினியோகம் செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. துத்தநாக சல்பேட் 30 ஆயிரம் ஏக்கருக்கு 300 டன் வினியோகம் செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாசன நீரை சிக்கனமாக உபயோகப்படுத்த தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள் 250 யூனிட்டுகள் வினியோகம் செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காவிரி பாசன விவசாயிகள் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு

ஏக்கருக்கு ரூ.1400 என்ற அளவில் 8ஆயிரம் ஏக்கருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டம்

அரியலூர் மாவட்டத்தில் விலையில்லா நடவு எந்திரம் மூலம் நடவு செய்திட ஆயிரம் ஏக்கருக்கு ரூ. 40 லட்சம் பெறப்பட்டுள்ளது. நுண்ணூட்ட உரக்கலவை 1500 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.2 லட்சத்து 55 ஆயிரமும், துத்தநாக சத்து பற்றாக்குறையை நீக்கிட சிங்க் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கு ரூ.10 லட்சமும் பெறப்பட்டுள்ளது. பாசன நீரை சிக்கனமாக உபயோகப்படுத்த தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள் 50 யூனிட் வினியோகம் செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம்

திருச்சி மாவட்டத்தில் நடவு எந்திரம் மூலம் நடவு செய்ய 1500 ஏக்கர் பரப்பிற்கு ரூ.60 லட்சமும், நுண்ணூட்ட உரக்கலவை வினியோகம் செய்வதற்கு 1500 ஏக்கருக்கு ரூ.2 லட்சத்து 55 ஆயிரமும், சிங்க் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ அளவில் 4 ஆயிரம் ஏக்கருக்கு ரூ.16 லட்சமும் பெறப்பட்டுள்ளது. பாசன நீரை சிக்கனமாக உபயோகப்படுத்த தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள் 50 யூனிட் வினியோகம் செய்திட ரூ.10 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி திட்டத்தினை செயல்படுத்திட ரூ.88 லட்சத்து 50 ஆயிரம் பெறப்பட்டுள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் குறுவை சாகுபடி செய்யும் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை ஆணையர் ராஜேந்திரன் இலவச நுண்ணூட்ட உரக்கலவையை வழங்கினார்.

அதேபோல திருவையாறை அடுத்த வில்லியநல்லூரில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின் மூலம் எந்திர நடவு முறையினை வேளாண்மைத்துறை ஆணையர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை கூடுதல் இயக்குனர் ஜெயசுந்தர், இணை ஆணையர் சீனிவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஆண்டிப்பட்டி பகுதியில் மானாவாரி சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்



ஆண்டிப்பட்டி,
ஆண்டிப்பட்டி பகுதியில் மானாவாரி சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகிறார்கள்.

<u>தென்மேற்கு பருவமழை</u>

கேரளாவில் தென்மேற்கு பருவமழை விரைவில் தொடங்குவதன் எதிரொலியாக தேனி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பே காற்று வீசத் தொடங்கியுள்ளது. கேரளாவில் பருவமழை தொடங்கியவுடன் தேனி மாவட்டத்தில் சாரல்மழை பெய்யும். குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைய ஒட்டிய பகுதிகளில் அதிகமாக மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழை விவசாயிகளுக்கு கைகொடுக்காத நிலையில், இந்த ஆண்டு சராசரியை விட கூடுதல் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால்

தென்மேற்கு பருவமழையை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

சிறுதானியங்கள்

இதற்கிடையே தேனி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு கோடை மழை பெய்ததால், விவசாயிகள் தரிசாக இருந்த நிலத்தை உழுது தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுவாக வடகிழக்கு பருவமழையின் போது தோட்டப்பயிர்களும், தென்மேற்கு பருவமழையின் போது மானாவாரி பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில், ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் மானாவாரி சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் தயாராகி வருகின்றனர். குறுகிய கால பயிர்களான துவரை, சோளம், கம்பு உள்ளிட்ட சிறுதானியங்கள், எண்ணை வித்துக்கள் பயிர்களை பயிர்செய்ய திட்டமிட்டுள்ளனர். தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு விவசாயிகளுக்கு கைகொடுக்கும் பட்சத்தில் அடுத்து வரும் 3 மாதங்களில் மானாவாரி பயிர்கள் அதிகமான விளைச்சலை தரும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.